**நவம்பர் – 26**

# TNPSC துளிகள்

- உள்துறை அமைச்சகமானது, சத்தீஸ்கரில் நக்சல் அமைப்புகளை ஒழிக்கவும், மாவோயிசத்தின் அரசியல் சித்தாந்தத்தை அகற்றவும் 'ககர் நடவடிக்கையினை' தொடங்கியுள்ளது.
- தாய்லாந்தின் நொந்தாபுரியில் 2025 ஆம் ஆண்டிற்கான 2025 ஆம் ஆண்டு பிரபஞ்ச அழகி போட்டியில் மெக்சிகோவினைச் சேர்ந்த பாத்திமா போஷ் பட்டம் வென்றார்.
- COP31 (பங்குதாரர்களின் மாநாடு 31) 2026 ஆம் ஆண்டில் துருக்கியினால் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியாவின் ஆராய்ச்சி மற்றும் அறிவு சார் சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்தச் செய்வதில் அவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக என்று அசிம் பிரேம்ஜி ISB ஆராய்ச்சி ஊக்குவிப்பு விருதைப் பெற்றுள்ளார்.
- அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்தப் பாரம்பரியக் கைவினை கலைஞர்களால் உருவாக்கப் பட்ட கத்தியான டாவோ, புவி சார் குறியீட்டினைப் பெற்றுள்ளது.
- இலங்கையின் கொழும்பில் நடைபெற்ற பார்வைத் திறனற்றோருக்கான மகளிர் T20 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் நேபாள அணியை வீழ்த்தி, இந்திய அணி வெற்றி பெற்றது.
- வங்க தேசத்தின் டாக்காவில் நடைபெற்ற போட்டியில் இந்திய மகளிர் கபடி அணி தொடர்ச்சியாக இரண்டாவது உலகக் கோப்பை பட்டத்தை வென்றது.
- தகவல், கல்வி, தொடர்பு மற்றும் உலகளாவிய புரிதலில் தொலைக்காட்சியின் பங்கை எடுத்துக்காட்டும் வகையில் நவம்பர் 21 ஆம் தேதியன்று உலக தொலைக்காட்சி தினம் அனுசரிக்கப்படுகிறது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## காவிரி டெல்டா பகுதியின் விரிவாக்கம்



- தமிழக மாநில அரசானது, காவிரி டெல்டா பகுதியில் உள்ள திருமுட்டம்/ஸ்ரீமுஷ்ணம் தாலுக்காவில் 38 வருவாய் கிராமங்களைச் சேர்த்துள்ளது.
- இந்த கிராமங்கள் ஆனது முன்னதாக, தனி நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்ட காட்டுமன்னார்கோயில் தாலுக்காவின் ஒரு பகுதியாக இருந்தன.
- இந்த விரிவாக்கம் முதன்முதலில் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டது.
- நீர்வளத் துறையின் அரசாணை (G.O.) ஆனது இந்த உள்ளடக்கத்தை உறுதிப்படுத்தி உள்ளது.
- இந்த நடவடிக்கையின் மூலம், தற்போது சிறந்த நிர்வாகம், நீர்ப்பாசன ஆதரவு மற்றும் மேம்பாட்டுத் திட்டமிடலுக்காக காவிரி டெல்டா பகுதியில் அதிக கிராமங்கள் சேர்க்கப்பட்டுள்ளது.
- இங்கு புதிதாக சேர்க்கப்பட்ட கிராமங்களில் ஆனந்தகுடி, கொக்கரசன் பேட்டை, மதகளிர்மாணிக்கம், ஸ்ரீசாத்தமங்கலம், குணமங்கலம் மற்றும் 32 கிராமங்கள் அடங்கும்.

## சுகாதார சேவையில் நான் முதல்வன் திட்டத்தின் விரிவாக்கம்





- சுகாதாரச் சேவைத் துறையில் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதற்காக செவிலியர் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுகாதார அறிவியல் துறைகளுக்கு நான் முதல்வன் திட்டத்தினை தமிழ்நாடு அரசு விரிவுபடுத்தியுள்ளது.
- இந்தப் புதிய முன்னெடுப்பின் கீழ், நவீன மருத்துவமனை சூழல்களில் அவசியமான தகவல் தொடர்பு திறன் மற்றும் டிஜிட்டல் திறன்களில் மாணாக்கர்கள் சிறப்புப் பயிற்சி பெறுவார்கள்.
- தமிழ்நாடு ஒரு முக்கிய மருத்துவச் சுற்றுலா மையமாக இருப்பதால், மாணாக்கர்கள் மருத்துவர்கள் மற்றும் நோயாளிகளுடன் திறம்பட தொடர்பு கொள்ள உதவுவதையும், வெளிநாடுகளில் வாய்ப்புகளை மேம்படுத்துவதையும் இந்தத் திட்டம் நோக்கமாகக்

கொண்டுள்ளது.

- பயிற்சி பெற்ற மாணாக்கர்கள் தங்கள் சுயவிவரங்களைப் பதிவேற்றுவதற்கு TNSkill Registry என்ற இலவச வலை தளத்தினை TNSDC அறிமுகப்படுத்தியுள்ளது; இதன் மூலம் பதிவு செய்யப்பட்ட முதலாளிகள் அந்த விவரங்களைப் பார்த்து அவர்களின் ஒப்புதலுடன் பணியாளர்களை தொடர்பு கொள்ளலாம்.

### தமிழ்நாடு மாணாக்கர் நலத் திட்டங்கள் 2024–25




- புதுமைப் பெண் திட்டத்தினால் 4.13 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் பயன் அடைந்தனர் (உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு 1,000 ரூபாய் மாதாந்திர உதவி).
- தமிழ்ப் புதல்வன் திட்டத்தினால் (VI முதல் X ஆம் வகுப்புகளில் தமிழ் வழியில் பயின்ற மாணவர்களுக்கு 1,000 ரூபாய் மாதாந்திர உதவியுடன்) 3.28 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்தனர்.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 2024–25 ஆம் ஆண்டில் மாநில உதவி பெறும் கிராமப்புறப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.
- இல்லம் தேடிக் கல்வி (வீடுகளில் இருந்தபடி கற்றல் உதவி) மையங்கள் மூலம் I–V வகுப்புகளைச் சேர்ந்த சுமார் 7.97 லட்சம் மாணாக்கர்கள் பயனடைந்தனர்.
- I–V வகுப்புகளைச் சேர்ந்த சுமார் 25.08 லட்சம் மாணாக்கர்கள் எண்ணும் எழுத்தும் (அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண் கணிதம்) மூலம் பயனடைந்தனர்.
- அரசுப் பள்ளிகளில் 8,200க்கும் மேற்பட்ட உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைக்கப் பட்டன என்பதோடு மேலும் 2024–25 ஆம் ஆண்டில் மேம்படுத்தல்களுக்காக 745 கோடி ரூபாய் நிதியும் பராமரிப்புக்காக 200 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டன.

## தேசியச் செய்திகள்

### இந்தியாவின் 53வது தலைமை நீதிபதி

- இந்தியாவின் 53வது தலைமை நீதிபதியாக (CJI) நீதிபதி சூர்ய காந்த் பதவியேற்று உள்ளார்.

- இது இந்தியக் குடியரசுத் தலைவரால் செய்து வைக்கப் பட்டது.
- 2000 ஆம் ஆண்டு ஜூலை 07 ஆம் தேதியன்று இவர் ஹரியானாவின் இளம் "தலைமை வழக்கறிஞராகப் பதவியேற்றார்.
- முதன்முறையாக, பூடான், இலங்கை, கென்யா, மலேசியா, மொரீஷியஸ், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலைமை நீதிபதிகள் மற்றும் நீதிபதிகளும் இந்தப் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டனர்.
- காந்த் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இமாச்சலப் பிரதேச மாநில உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.



## மீன்வளம் மற்றும் நீர் வாழ் உயிரின வளர்ப்பில் கண்காணிப்பு குறித்த தேசியக் கட்டமைப்பு 2025





- மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்புக்கான தேசிய டிஜிட்டல் கண்காணிப்பு அமைப்பை உருவாக்குவதே இந்த கட்டமைப்பின் நோக்கமாகும்.
- இது கடல் சார் உணவுப் பொருட்களை "பண்ணையிலிருந்து உணவு வரை" மற்றும் "மீன்பிடிப்பு முதல் நுகர்வோர் வரை" என்ற வகையில் நிகழ்நேரத்தில் கண்காணிக்கும்.
- இது இந்தியா முழுவதும் ஒரு ஒருங்கிணைந்த அமைப்பில் பல்வேறு கண்காணிப்பு நடைமுறைகளை ஒன்றிணைக்கிறது.

- இந்த அமைப்பு ஆனது QR குறியீடுகள், GPS, IoT சாதனங்கள் மற்றும் தொடர் சங்கிலித் தொழில்நுட்பம் போன்ற டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்தும்.
- இது உணவுப் பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கு சிறந்த அணுகலை உறுதி செய்ய உதவுகிறது.
- இந்தக் கட்டமைப்பில் சிறு மீனவர்கள் மற்றும் விவசாயிகள் எளிதாக பங்கேற்கக் கூடிய ஆதரவையும் உள்ளடக்கியது.

## 131வது அரசியலமைப்பு திருத்த மசோதா 2025

- 131வது அரசியலமைப்பு திருத்த மசோதா, 2025 ஆனது, சண்டிகரை அரசியலமைப்பின் 240வது சரத்தின் கீழ் கொண்டுவர முன்மொழிகிறது.
- சரத்து 240 ஆனது, சொந்தச் சட்டமன்றங்கள் இல்லாத ஒன்றியப் பிரதேசங்களுக்கு (UT) விதிமுறைகளை வெளியிட இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அனுமதியளிக்கிறது.
- இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், லட்சத்தீவு மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகள் போன்ற ஒன்றியப் பிரதேசங்களைப் போலவே சண்டிகருக்கும் நேரடியாக விதிகளை உருவாக்க இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அனுமதி வழங்கப்படும்.
- சண்டிகர் தற்போது பஞ்சாப் மற்றும் ஹரியானாவிற்கான பகிரப்பட்ட தலைநகராக உள்ளது.
- இந்தத் திட்டம் விதிகளை வகுப்பதை நெறிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது என்றும் சண்டிகரின் தற்போதைய நிர்வாக அமைப்பை மாற்றாது என்றும் மத்திய அரசு கூறியது.
- இந்த மசோதா இன்னும் முன்மொழிவு நிலையில் உள்ளது மற்றும் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படவில்லை.





## GRAP நிலைகளின் திருத்தம்

- காற்று தர மேலாண்மை ஆணையம் ஆனது ஒட்டுமொத்த தேசிய தலைநகரப்

பகுதிக்கும் (NCR) தரப்படுத்தப்பட்ட எதிர் நடவடிக்கை செயல் திட்டத்தை (GRAP) திருத்தியமைத்துள்ளது.

- டெல்லியின் காற்று தரக் குறியீடு (AQI) 'மிகவும் மோசமான' பிரிவில் கிட்டத்தட்ட 360 ஆக இருந்தது.
- GRAP IV ஆம் நிலை நடவடிக்கைகள் மூன்றாம் நிலைக்கு மாற்றப்பட்டதால் கடுமையான விதிகள் முன்னதாகவே தொடங்கப்படலாம்.
- டீசல் எரிபொருளில் இயங்கும் மின்னாக்கிகளைத் தவிர்ப்பது மற்றும் அதிகப் பொதுப் போக்குவரத்தைச் சேர்ப்பது போன்ற நடவடிக்கைகள் உட்பட இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை நடவடிக்கைகளுக்கு மாற்றப்பட்டன.
- திருத்தப்பட்ட GRAP இரண்டாம் நிலையின் கீழ், NCR அலுவலகங்கள் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வெவ்வேறு அட்டவணை நேரங்களைப் பயன்படுத்தும்.
- டெல்லியின் சராசரி AQI மற்றும் மாசு முன்னறிவிப்புகளின் அடிப்படையில் GRAP அமல்படுத்தப் படுகிறது.




## துறைமுகங்களுக்கான புதிய ஒருங்கிணைந்தப் பாதுகாப்பு மாதிரி



- இந்தியாவில் உள்ள 250க்கும் மேற்பட்ட துறைமுகங்களுக்கான பாதுகாப்பு ஒழுங்கு முறை ஆணையமாக மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படையை (CISF) மத்திய அரசு நியமித்துள்ளது.
- ஒரு "இறையாண்மை நிறுவனம்" ஆனது அனைத்து துறைமுகங்களையும் ஒரே மாதிரியான பாதுகாப்பு அமைப்பின் கீழ் கொண்டு வந்து, தற்போது தனியார் சரக்கு கையாளும் துறைமுகங்களில் பாதுகாப்பை நிர்வகிக்கும்.
- குறைந்தபட்சம் 80 முக்கிய EXIM துறைமுகங்கள் ஆரம்பத்தில் அணுகல் கட்டுப்பாடு, சரக்கு சோதனை மற்றும் கடல் பரப்பு ரோந்துக்காக CISF பிரிவினால் கட்டுப்படுத்தப் படும்.
- CISF ஆனது, ஏற்கனவே 13 முக்கியத் துறைமுகங்களைப் பாதுகாத்து வருகிறது, ஆனால் இன்னும் பல துறைமுகங்கள் தற்போது ஒருங்கிணைந்தப் பாதுகாப்பு அமைப்புகள் இல்லாமல் தனியார் நிறுவனங்கள் அல்லது உள்ளூர் காவல்துறையை சார்ந்துள்ளன.
- இந்த நடவடிக்கை உள்துறை அமைச்சகம் (MHA) மற்றும் ISPS (சர்வதேசக் கப்பல் மற்றும் துறைமுக மைய பாதுகாப்பு) விதிகளின் கீழ் CISF பிரிவினை அங்கீகரிக்கப் பட்ட பாதுகாப்பு அமைப்பாக (RSO) நியமிக்கப்பட்டதன் மூலம் வழங்கப் பட்ட வழி காட்டுதல்களைப் பின்பற்றுகிறது.

## சர்வதேசச் செய்திகள்

### சமூக ஊடகத் தடை – ஆஸ்திரேலியா




- ஆஸ்திரேலியா 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சமூக ஊடகப் பயன்பாட்டுத் தடையைத் தொடங்க உள்ளது.
- இந்தத் தடையில் Twitch, Instagram, TikTok மற்றும் Snapchat போன்ற தளங்களும் அடங்கும்.
- விதிகளை மீறும் தளங்களுக்கு 49.5 மில்லியன் ஆஸ்திரேலிய டாலர்கள் (AUD) வரை அபராதம் விதிக்கப்படலாம்.
- தீங்கு விளைவிக்கும் இயங்கலை சார் உள்ளடக்கத்திலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான இயங்கலைப் பாதுகாப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாக இந்தத் தடை உள்ளது.

## ACITI தொழில்நுட்பக் கூட்டாண்மை

- இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகியவை ஆஸ்திரேலியா-கனடா-இந்தியா தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கக் (ACITI) கூட்டாண்மை என்ற புதியதொரு கூட்டாண்மையை அறிவித்துள்ளன.
- ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்ற G20 உச்சி மாநாட்டில் மூன்று நாடுகளின் பிரதமர்களின் கூட்டத்தின் போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- தூய்மையான ஆற்றல் மற்றும் முக்கியக் கனிமங்கள் போன்ற முக்கியமான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் இணைந்து பணியாற்றுவதை இந்தக் கூட்டாண்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மூன்று நாடுகளிடையே வலுவான மற்றும் மீள்தன்மை கொண்ட விநியோகச் சங்கிலிகளை உருவாக்குவதிலும் கவனம் செலுத்துகிறது.
- பொதுச் சேவைகளை மேம்படுத்தச் செய்வதில் செயற்கை நுண்ணறிவு (AI) பயன்பாடு குறித்து மூன்று நாடுகளும் கூட்டாக ஆராய உள்ளன.




## அணுசக்தி தாக்குதல் எதிர்ப்புத் திறன் கொண்ட மிதக்கும் செயற்கை தீவு



- சீனா ஆழ்கடல் ஆராய்ச்சிக்காக 2028 ஆம் ஆண்டிற்குள் தயாராக இருக்கத் திட்டமிடப் பட்டுள்ள ஓர் இடம் பெயருகின்ற மிதக்கும் செயற்கை தீவை உருவாக்கத் தொடங்கி உள்ளது.
- இந்தத் தளத்திற்கு ஆழ்கடல் அனைத்து-வானிலை குடியிருப்பு அம்சம் கொண்ட மிதக்கும் ஆராய்ச்சி மையம் என்று பெயரிடப்பட்டுள்ளது என்பதோடு மேலும் இது சுமார் 78,000 டன் எடை கொண்டது.
- இந்தத் தீவு, மிகவும் வலுவான அதிர்ச்சிகளை உள்வாங்கக் கூடிய, அணு குண்டு வெடிப்புகளுக்கு எதிர்ப்புத் திறன் கொண்ட லேட்டிஸ் என்ற ஒரு சிறப்பு உலோகப் பொருளைப் பயன்படுத்தி கட்டமைக்கப்படுகிறது.
- இந்தத் தீவு சீனாவின் 14வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதோடு இது வெப்ப மண்டலப் புயல்கள் உட்பட மிகவும் கடுமையான கடல் சார் சூழல்களிலும் செயல்படக் கூடியது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு - நவம்பர் 2025




- இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு 2025 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் இதுவரையில் இல்லாத அளவுக்கு 692.57 பில்லியன் டாலரை எட்டியது.
- தங்கத்தின் இருப்பு அதிகபட்சமாக 5.32 பில்லியன் டாலர் அதிகரித்து 106.86 பில்லியன் டாலராக உயர்ந்தது.
- வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் (FCA) 152 மில்லியன் டாலர் அதிகரித்து $562.29 பில்லிய ன் டாலராக உயர்ந்தது.
- சிறப்பு எடுப்பு உரிமைகள் (SDR) 56 மில்லியன் டாலர் அதிகரித்து 18.65 பில்லியன் டாலராக உயர்ந்தது.
- இந்தியாவின் IMF இருப்பு நிலை 8 மில்லியன் டாலர் அதிகரித்து சுமார் 4.779 பில்லியன் டாலராக உயர்ந்தது.

### UPI–TIPS பன்னாட்டு பண வழங்கீட்டு அமைப்பின் இணைப்பு குறித்த அறிவிப்பு

- ஐரோப்பிய ஒன்றியத்தின் TARGET உடனடி பண வழங்கீட்டுத் தீர்வு (TIPS) அமைப்புடன் UPI இணைக்கப்படும் என்று RBI அறிவித்துள்ளது.
- இந்த நடவடிக்கையானது பன்னாட்டு பண வழங்கீடுகளை மலிவானதாகவும், வேகமானதாகவும் மற்றும் மிகவும் வெளிப்படையானதாகவும் மாற்றுவதற்காக G20 செயல் திட்டத்தினை ஆதரிக்கிறது.
- RBI மற்றும் NPCI சர்வதேசக் கொடுப்பனவுகள் லிமிடெட் (NIPL) ஆகியவை UPI–TIPS இணைப்பின் அமலாக்கக் கட்டத்தைத் தொடங்க ஐரோப்பிய மத்திய வங்கியுடன் (ECB) இணைந்து பணியாற்றியுள்ளன.
- TIPS என்பது யூரோசிஸ்டம் (யூரோ பகுதியின் மத்திய வங்கிகள்) இயக்கும் உடனடி பண வழங்கீட்டு முறையாகும்.
- UPI–TIPS இணைப்பு இந்தியாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் எளிதான மற்றும் விரைவான பன்னாட்டுப் பணப் பரிமாற்றங்களை செயல்படுத்த உதவும்.





## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### தாய்ப்பாலில் யுரேனியம் கலப்பு

- பீகார் மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஆறு ஆய்வில், 40 தாய்மார்களிடமிருந்து சேகரிக்கப் பட்ட அனைத்துத் தாய்ப்பால் மாதிரிகளிலும் யுரேனியம் (U-238) இருப்பது கண்டறியப்பட்டது.
- இது அதிகபட்சமாக கதிஹாரில் பதிவாகியுள்ளதுடன், யுரேனியக் கலப்பு அளவுகள் லிட்டருக்கு 0 முதல் 5.25 மைக்ரோகிராம் (µg/L) வரை இங்கு இருந்தன.
- மாசுபாட்டின் அளவில் மாவட்டங்களின் வரிசை கதிஹார், சமஸ்திபூர், நலந்தா, ககாரியா, பெகுசராய் மற்றும் போஜ்பூர் ஆகும்.
- சுமார் 70% குழந்தைகளுக்கு 1க்கு மேல் ஆபத்து அளவு (HQ) இருப்பதாக ஆய்வு கூறுகிறது என்பதோடு இது புற்றுநோய் உருவாக்காத பாதிப்பு ஆபத்தைக் குறிக்கிறது.
- இந்த ஆய்வு அதன் கண்டுபிடிப்புகளை உலக சுகாதார அமைப்பின் (WHO)


குடிநீருக்கான 30 µg/L என்ற வரம்புடன் (கண்டறியப்பட்ட அளவை விட அதிகமான வரம்பு) ஒப்பிட்டது.

❖ இந்த ஆய்வு யுரேனியம் இருப்பினை ஆய்வு செய்யப்பட்ட பகுதிகளில் மாசுபட்ட நிலத்தடி நீர் மற்றும் உள்ளூர் உணவுச் சங்கிலியுடன் தொடர்பு படுத்தியது.




# முக்கிய தினங்கள்

## தேசிய ஒருங்கிணைப்பு தினம் 2025 - நவம்பர் 19




❖ இது இந்தியாவின் முதல் பெண் பிரதமரான இந்திரா காந்தியின் பிறந்தநாளைக் குறிக்கிறது.

❖ இந்த நாள் அனைத்து மக்களிடையே ஒற்றுமை, சமத்துவம், அமைதி மற்றும் தேசிய

ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்திரா காந்தி 1966–1977 மற்றும் 1980–1984 ஆம் ஆண்டு வரை பிரதமராகப் பணி ஆற்றினார்.
- 1971 ஆம் ஆண்டில், 26வது சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி, அரசியலமைப்பின் 291 மற்றும் 362 ஆகிய சரத்துகளின் கீழ் அரச மானிய (முன்னாள் இளவரசர்களுக்கு பணம் செலுத்துதல்) முறையினை முடிவுக்குக் கொண்டு வந்தார்.
- 1975 ஆம் ஆண்டில், வறுமையைக் குறைத்தல், கிராமப்புற வாழ்க்கையை மேம்படுத்துதல் மற்றும் வீட்டுவசதி, கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுச் சூழலை ஆதரித்தல் ஆகியவற்றிற்காக இருபது அம்சத் திட்டத்தைத் தொடங்கினார்.
- அவரது "கரிபி ஹடாவோ" (வறுமையை நீக்குதல்) என்ற முழக்கம் நலத்திட்டங்களுக்கு வழிகாட்டியதோடு, ஏழைகளுக்கு உதவ ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாற்றங்களைச் சேர்த்தது (1974–1979).

## உலகப் பாரம்பரிய வாரம் 2025 - நவம்பர் 19/25




- இது யுனெஸ்கோ மற்றும் ASI (இந்திய தொல்பொருள் ஆய்வு) ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- உலகம் முழுவதும் கலாச்சார மற்றும் இயற்கை பாரம்பரியத்தைப் பத்திரப் படுத்தி அதனைப் பாதுகாப்பதே இதன் நோக்கம் ஆகும்.
- இந்தியாவில் நினைவுச்சின்னங்கள், கோயில்கள் மற்றும் இயற்கைப் பூங்காக்கள் உட்பட 42 யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளங்கள் உள்ளன.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Heritage under Threat from Disasters and Conflicts: Preparedness and Learning from 60 Years of ICOMOS Actions" என்பதாகும்.

## உலக மீன்வள தினம் 2025 - நவம்பர் 21

- இந்த நாள், 18 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் உலக மீன்வள மன்றத்தை உருவாக்கிய 1997 ஆம் ஆண்டில் புது டெல்லியில் தொடங்கியது என்பதோடு இதன்

மூலம் இந்தியாவை இந்த தினத்திற்கான அனுசரிப்பின் தோற்றுருவாக மாற்றியது.

- இந்தியா தற்போது சீனாவிற்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது பெரிய மீன் உற்பத்தியாளராகவும், ஒரு பெரிய இறால் ஏற்றுமதியாளராகவும் உள்ளது.
- 2024 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் கடல்சார் பொருட்களின் ஏற்றுமதி 11.08% அதிகரித்துள்ளது.
- இந்தியா "India's Blue Transformation: Strengthening Value Addition in Seafood Exports" என்ற ஒரு கருத்துருவுடன் இந்தத் தினத்தைக் கொண்டாடியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★